IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

LAOP.No.3/2025

dated : 09.04.2026

C.W. 1

Name தங்கமுடி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1964 ம் ஆண்டு என் தந்தையும் அவரது சகோதரரும் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் என் தந்தையின் பெயர் மட்டும் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.2956 ல் மற்ற உரிமையாளர்கள் வள்ளிமுத்து, குருசாமி, தர்மர், தேனாம்மாள் ஆகியோர் பெயர் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.692 ல் அருணகிரி, வள்ளிமுத்து, தர்மர் ஆகியோர் பெயர் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.695 மற்றும் 2956 ல் உள்ள சொத்துக்களுக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.1197/- என இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூடுதல் இழப்பீடு ஏதும் கோரவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் இவ்வழக்கு சொத்துக்களை எனக்கு பாத்தியப்பட்டது என தீர்மானிக்கும்போது இழப்பீட்டை வழங்க அரசு தரப்பில் ஆட்சேபனை ஏதும் இல்லை என்றும் எனவே உரிமையாளர் பற்றிய தகவல் முழுமையற்றதாக இருந்ததால் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யும் நிலை ஏற்பட்டது என்றும் நான் விசாரணை அலுவலர் முன்பு முறையான

ஆவணங்களை சமர்ப்பிக்காததாலேயே இப்பரிந்துரைக்கு அவசியம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.04.09 18:33:19 +0530